# ஜனவரி – 12 – சனி

## புனித பெனடிக்ட்

**அல்லேலூயா! ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள்: திபா. 149:1**

## முதல் வாசகம் : 1 யோவான் 5 : 14 - 21

பிள்ளைகளே, நாம் கேட்பது கடவுளுடைய திருவுளத்திற்கு ஏற்ப அமைந்திருப்பின், அவர் நமக்குச் செவிசாய்க்கிறார் இதுவே நாம் அவர்மீது கொண்டுள்ள உறுதியான நம்பிக்கை. நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிசாய்க்கிறார் என்று நமக்குத் தெரியும். எனவே, நாம் அவரிடம் கேட்டவற்றைப் பெறுவோம் என்னும் உறுதி நமக்கு உண்டு. பாவம் செய்வோர் சாவுக்குரிய பாவம் செய்யவில்லை என்று கண்டால், அவர்களுக்காகக் கடவுளிடம் வேண்டுதல் செய்ய வேண்டும். கடவுளும் அவர்களுக்கு வாழ்வு அருள்வார். சாவுக்குரிய பாவமும் உண்டு. அப்பாவத்தைச் செய்வோருக்காக வேண்டுதல் செய்ய வேண்டும் என நான் சொல்லவில்லை. தீச்செயல் அனைத்துமே பாவம் ஆனால் எல்லாப் பாவமுமே சாவுக்குரியவை அல்ல. கடவுளிடமிருந்து பிறந்தோர் பாவம் செய்வதில்லை என்பது நமக்குத் தெரியும். ஏனெனில் கடவுளிடமிருந்து பிறந்தவர்களை அவர் பாதுகாக்கிறார். தீயோன் அவர்களைத் தீண்டுவதில்லை. நாம் கடவுளைச் சார்ந்தவர்கள் ஆனால், உலகனைத்தும் தீயோனின் பிடியில் இருக்கிறது. இது நமக்குத் தெரியும். இறைமகன் வந்து உண்மையான இறைவனை அறிந்து கொள்ளும் ஆற்றலை நமக்குத் தந்துள்ளார். இது நமக்குத் தெரியும். நாம் உண்மையான இறைவனோடும் அவர் மகன் இயேசுக் கிறிஸ்துவோடும் இணைந்து வாழ்கிறோம். இவரே உண்மைக் கடவுள். இவரே நிலைவாழ்வு. பிள்ளைகளே, சிலைவழி பாட்டைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

**பதில்பாடல்:** ஆண்டவர் தம் மக்கள் மீது விருப்பம் கொள்கிறார்.

## நற்செய்தி : யோவான் 3 : 22 - 30

அக்காலத்தில் இயேசுவும் அவர்தம் சீடரும் யூதேயப் பகுதிக்குச் சென்றனர். அங்கே அவர் அவர்களோடு தங்கித் திருமுழுக்குக் கொடுத்து வந்தார். யோவானும் சலீம் என்னும் இடத்துக்கு அருகில் உள்ள அயினோனில் திருமுழுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஏனெனில் அங்குத் தண்ணீர் நிறைய இருந்தது. மக்கள் அங்கு சென்று திருமுழுக்குப் பெற்றுவந்தார்கள். யோவான் சிறையில் அடைக்கப்படுமுன் இவ்வாறு நிகழ்ந்தது. ஒரு நாள் யோவானின் சீடர் சிலருக்கும் யூதர் ஒருவருக்கும் இடையே தூய்மைச் சடங்குபற்றி விவாதம் எழுந்தது. அவர்கள் யோவானிடம் போய், ”ரபி, யோர்தான் ஆற்றின் அக்கரைப் பகுதியில் உம்மோடு ஒருவர் இருந்தாரே! நீரும் அவரைக் குறித்துச் சான்று பகர்ந்தீரே! இப்போது அவரும் திருமுழுக்குக் கொடுக்கிறார். எல்லாரும் அவரிடம் செல்கின்றனர்” என்றார்கள். யோவான் அவர்களைப் பார்த்து, ”விண்ணிலிருந்து அருளப்படா விட்டால் எவரும் எதையும் பெற்றுக்கொள்ள முடியாது. ”நான் மெசியா அல்ல் மாறாக அவருக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவன்” என்று நான் கூறியதற்கு நீங்களே சாட்சிகள். மணமகள் மணமகனுக்கே உரியவர். மணமகனின் தோழரோ அருகில் நின்று அவர் சொல்வதைக் கேட்கிறார் அதில் அவர் பெருமகிழ்ச்சி அடைகிறார். என் மகிழ்ச்சியும் இது போன்றது. இம்மகிழ்ச்சி என்னுள் நிறைந்துள்ளது. அவரது செல்வாக்குப் பெருக வேண்டும் எனது செல்வாக்குக் குறைய வேண்டும்” என்றார்.

**தியானம்:** திருமுழுக்கு யோவானிடமிருந்து நாம் கற்று கொள்ள வேண்டிய பாடங்கள் பல: அவற்றுள் ஒன்று அவரது தன்னடக்கமும், தன்னுணர்வும். மெசியாவைப் பற்றிச் சான்று பகரும்போது, தன்னை மணமகனாக அல்லாது, மணமகனின் அருகில் நின்று, மணமகன் சொல்வதைக் கேட்டு அதில் மகிழ்ச்சி அடையும் தோழருக்கு ஒப்பிடுகிறார். இறுதியாக, “அவரது செல்வாக்கு பெருகவேண்டும். எனது செல்வாக்கு குறைய வேண்டும்” என்றார். இது தான் கிறிஸ்துவின் பணியாளர், சீடர் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய மனநிலை. பெருமையும், பாராட்டும் தனக்கென்று தேடாமல், இறைவனையே மாட்சிப்படுத்த வேண்டும். தனக்கென்று சொந்தக் கனவுகள், திட்டங்கள் தீட்டாமல், இறைவனின் திட்டத்தை, கனவை நிறைவேற்ற முன்வரவேண்டும். தனது சொந்த செல்வாக்கு குறைய வேண்டும் என்று மனதார விரும்ப வேண்டும். அவர்கள் தான் இயேசுவின் உண்மையான சீடர்கள், நேர்மையான முன்னோடிகள். இன்றைய திருவழிப்பாட்டில் நாம் ஒவ்வொருவரும் ஜெபிப்போம். அன்பே உருவான ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். எரிகின்றதிரியாக, உமக்காகத் தன்னையே கரைத்துக் கொண்ட திருமுழுக்கு யோவானுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். அவரைப் போல நாங்களும் எளிய மனம் கொண்டு உமக்காக வாழ அருள் தாரும்.